என்னை ஆதரியும்
Uphold Me
Album 27 Song 3

Song 3 என்னை ஆதரியும்

Psalm 109 – Shift from imprecation to personal plea. The psalmist, poor and needy, asks God to uphold him by His name and deliver him by His mercy.

என்னை ஆதரியும்
உமது நாமத்தினால் - ஏசுவே
என்னை விடுவித்திடும்
உமது கிருபையினால் - கர்த்தரே
என்னை ஆதரியும் என்னை விடுவித்திடும்
உமது நாமத்தினால் உமது கிருபையினால்

நான் சிறுமையும் எளிமையும் ஆனவன்
என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்குது
சாயும் நிழலைப்போல் அகன்று போனேன்
வெட்டுக்கிளியைப்போல் பறக்கடிக்கப்படுகிறேன்

என்னை ஆதரியும்
உமது நாமத்தினால் - ஏசுவே
என்னை விடுவித்திடும்
உமது கிருபையினால் - கர்த்தரே
என்னை ஆதரியும் என்னை விடுவித்திடும்
உமது நாமத்தினால் உமது கிருபையினால்

உபவாசத்தினால் என் முழங்கால்கள்
தளர்ச்சியடைந்தது
என் மாம்சம் புஷ்டியற்று உலர்ந்து போகிறது
துன்மார்க்கருக்கு நான் நிந்தையானேன்
அவர்கள் என்னைப்பார்த்துத் தங்கள் தலையைத்
துலுக்குகின்றனர்

என்னை ஆதரியும்
உமது நாமத்தினால் - ஏசுவே
என்னை விடுவித்திடும்
உமது கிருபையினால் - கர்த்தரே
என்னை ஆதரியும் என்னை விடுவித்திடும்
உமது நாமத்தினால் உமது கிருபையினால்

எனக்கு சகாயம் பண்ணும்
உமது கரத்தினால்
என்னை இரட்சியும்
உமது கிருபையினால்
எனக்கு சகாயம் பண்ணும் என்னை இரட்சியும்
உமது கரத்தினால் உமது கிருபையினால்

துன்மார்க்கர் சபித்தாலும் என்னை நீர்
ஆசீர்வதியும்

அவர்கள் எழும்பினாலும் வெட்கப்பட்டு போகட்டும்
உமது அடியான் மகிழ்ச்சியோடு இருக்கட்டும்
தங்கள் வெட்கத்தை சால்வையைப்போல்
தரிக்கட்டும்

எனக்கு சகாயம் பண்ணும்
உமது கரத்தினால் - ஏசுவே
என்னை இரட்சியும்
உமது கிருபையினால் - கர்த்தரே
எனக்கு சகாயம் பண்ணும் என்னை இரட்சியும்
உமது கரத்தினால் உமது கிருபையினால்

கர்த்தரே உம்மை என் வாயினால் துதிப்பேன்
அநேகர் நடுவிலே உம்மைப் புகழுவேன்
இந்த எளியவனின் ஆத்துமாவை இரட்சித்திட
எனக்கு வலது பாரிசத்தில் நின்றிடும்

எனக்கு சகாயம் பண்ணும்
உமது கரத்தினால் - ஏசுவே
என்னை இரட்சியும்
உமது கிருபையினால் - கர்த்தரே
எனக்கு சகாயம் பண்ணும் என்னை இரட்சியும்
உமது கரத்தினால் உமது கிருபையினால்